[1994 ஏப்ரல் 13

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 104-வது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒரு உறுப்பினரைப் பேச அனுமதிக்கும்போது, நீங்கள் இவ்வாறு நடந்துகொள்வது முறைகேடு. உட்காருங்கள். அவர் ஒரு பொருள் குறித்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, நான் அவரை அனுமதிக்கும்போது, நீங்கள் எழுந்திருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) உங்களுக்காகவே இந்த அவையை எடுத்துக்கொள்ள முடியாது. இன்னொரு உறுப்பினருக்கும் அந்த உரிமை உண்டு. அவர் ஒன்றை எழுப்ப வேண்டுமென்று என்னிடம் கேட்டிருக்கிறார். அவரை அனுமதிக்க மாட்டோம் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்ட சிற்பியும், இந்தியத் துணைக் கண்டத்தின் 22 கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் இரட்சகருமான, பாரத ரத்னா பாபாசாகேப் டாக்டர் அண்ணல் அம்பேத்காரின் 104-வது பிறந்தநாளை, நாளை நாடு முழுவதும் கொண்டாட இருக்கிறோம். மாநில அளவிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஆட்சியிலே இருந்தபோது, அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடினார்கள். இடைப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, அது நிறுத்தப்பட்டு விட்டது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அண்ணல் அம்பேத்கார் பெயரிலே அபரிமிதமான மரியாதை கொண்டவர். எனவேதான், கடந்த ஆண்டு,

1994 ஏப்ரல் 13] [திரு. செ. கு. தமிழரசன்]

ஏப்ரல் 14-ஆம் தேதி, அண்ணல் அம்பேத்கார் பெயரிலே ஒரு மணிமண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி, ஆயிரம் ஆண்டுகளுக்கே ஒருமுறை மலர்கின்ற அற்புத மலர் என்று, அண்ணல் அம்பேத்கார் அவர்களைப் பாராட்டினார்கள். அந்த வழியிலே வருகிற இந்த அரசு, மாநில அளவிலே, அண்ணல் அம்பேத்காரின் பிறந்தநாளைக் கொண்டாட உத்தேசித்திருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தள மக்களின் இதயக் கமலமாக, ஒடுக்கப்பட்ட மக்களின் இதய வீணையாக, தன் வாழ்நாட்களையெல்லாம், தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, பணியாற்றிய அண்ணல் டாக்டர் அம்பேத்காருடைய பிறந்த நாளையொட்டி, நாளைய தினம், அவருடைய சிலைக்கு நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மாலை அணிவித்து, பெருமைப்படுத்த இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அண்ணல் டாக்டர் அம்பேத்காருடைய பிறந்த நாள் விழா மாநில அளவிலே கொண்டாடப்படவில்லை, இந்த அரசின் சார்பிலே கொண்டாடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். வருகின்ற 21-4-1994 அன்று காஞ்சிபுரத்திலே டாக்டர் அம்பேத்காருடைய பிறந்த நாள் விழா மாநில அளவிலே தமிழக அரசின் சார்பிலே கொண்டாடப்பட வேண்டுமென புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அந்த விழாவிலே 4 அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டுமெனவும் உத்திரவிட்டிருக்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி வேண்டுகோளை ஏற்று காஞ்சிபுரத்திலே நடைபெற இருக்கின்ற, மாநில அளவிலே நடத்தப்படவிருக்கின்ற டாக்டர் அம்பேத்காருடைய விழாவிலே கலந்துகொள்ள வேணடுமென அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அதுமாத்திரம் அல்ல. ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவிலே டாக்டர் அம்பேத்காருடைய பிறந்த நாள் விழா தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1994 ஏப்ரல் 13

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தடைப்பட்டிருந்த அந்த விழாவை மீண்டும் இன்றைக்கு அரசு விழாவாக நடத்த ஆணை பிறப்பித்த ஒடுக்கப்பட்ட மக்களின் ரட்சகராக விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, பாட்டாளி மக்கள் கட்சியினர் போராடி வருவது பற்றி என்னிடத்திலே ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுபற்றி ஏற்கெனவே இந்த அவையில் சீரோ அவரிலே எழுப்பப்பட்டு, அந்தக் கட்சியினுடைய தலைவர் கைது செய்யப்பட்டிருப்பது பற்றியும், அதன் காரணமாக அந்தக் கட்சியினர் செய்து வருகின்ற பல்வேறு வன்முறைகள் காரணமாக எந்த அளவுக்கு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகிறது என்பதைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும், அதே பொருள் பற்றி சீரோ அவரிலே கிளப்ப வேண்டுமென்று நீங்கள் கேட்பதை அனுமதிக்க இயலாது என்று தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். நீங்கள் மீண்டும் அதை எழுப்ப வேண்டுமென்று வற்புறுத்துவது சரியல்ல. அதுவே திரு. பழனிசாமிக்கும் பொருந்தும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக இந்த அவையிலே அதுபற்றி விளக்கம் கொடுத்துவிட்ட காரணத்தினால் நான் அனுமதிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) போதும், நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அது பற்றித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு, விரிவாக எந்த அளவுக்கு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் எடுத்துத் தெரிவித்ததோடு, இதைக் கடுமையாக ஒடுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது, அதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்கள். (குறுக்கீடு) அதே பொருள் பற்றி சீரோ அவரிலே கிளப்ப முடியாது என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு பொருள் பற்றி இந்த அவையிலே எழுப்பி, அதற்குப் பதிலை தெரிவித்ததற்குப் பிறகு அதே